543

# பாட்டும் பயனும்

ANNAMALAI UNIVERSITY LIBRARY
20 SEP 1961
*ANNAMALAINAGAR.*

அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்.
தமிழ்ப் பேராசிரியர்
தமிழ்க்கலை இல்லம், சென்னை-30

தமிழ்க்கலைப் பதிப்பகம்
சென்னை-30

விலை ரூ.
2·50

முதல் பதிப்பு : ஜூன், 1959

031:217

சாது அச்சுக்கூடம்
மயிலாப்பூர், சென்னை-4

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை

# முன்னுரை

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் ஆற்றும் தமிழ்ப்பணி நாடறிந்த ஒன்றாகும். மதுரைக்குச் சிலநாள் வாழவந்த என்னையும் அப்பணிவழி செயலாற்றத் தூண்டினர். அவர் தம் அன்பாணையை ஏற்றுப் பத்துப் பாட்டினை ஏழு தலைப்புக்களில் ஏழு ஞாயிறு களில் பேச இசைந்தேன். அப்படியே பேசினேன். அப்பேச்சுக்களின் தொகுப்பே இந்நூல்.

பேச்சு வரிசையின் தொடக்க விழா விற்குக் கருமுத்து. தி. சுந்தரம் செட்டியார் அவர்கள், தலைமை தாங்கிப் பல நல்ல கருத்துக்களை வீசி அவற்றின் வழி என் பேச்சு வரிசையை அமைக்க வழி கோலி னார்கள். இப்பேச்சு வரிசைவழி பத்துப் பாட்டு அனைத்தையும் ஆழ்ந்து எடுத்துக் காட்டிவிட்டேன் என்று சொல்ல முடியாது. என்றால் இயன்றவரை ஓரளவு கொண்ட தலைப்புக்கு ஏற்பச் சிற்சில கருத்துக்களையே சொல்லி இருக்கிறேன்.

பத்துப்பாட்டு தமிழ் இலக்கிய உலகி லேயே மிகச் சிறந்த தொகுப்பாகும். சங்க காலத்திலே வாழ்ந்த மேலான நல்ல ஒழுக்கமும் பண்பாடும் கொண்ட சிறந்த புலவர்கள் பாடியவை இவை. இவற்றை ஆராய்ந்து பல புலவர்கள் பலப்பல கட் டுரைகள் எழுதியுள்ளனர். அவர்தம் பணி களுக்கிடையில் என்னுடையது மிகச் சிறிய தாகும். இப் பாட்டுக்களைப் பயிலுங்கால்

அதன் பொருள் உணர்ந்து பயன்பெற விரும்புவார் மிகச் சிலரே. புலவர் வாய் மொழிக்குப் பயனே மக்கள் ஒழுக்கமும் பண்பாடும் உற்று வாழ்வதாகும். அந்த வகைக்கு இப் பத்துப் பாட்டு எவ்வாறு பயன் பெறுகின்றது என்பதை இந்நூலில் ஓரளவு காட்டியதாக நான் கருதினமையின் இதற்குப் '**பாட்டும் பயனும்**' என்று பெயரிட்டேன். அறிஞரும் பிறரும் ஏற்று என்னை இத்துறையில் பணியாற்ற மேலும் ஊக்குவார்கள் என்ற துணிபுடையேன்.

இப் பேச்சு வரிசையை விரும்பி அமைத்து என்னைப் பேச வைத்த மதுரைத் திருவள்ளுவர் கழகத் தலைவர் திரு. பழநியப்பன் அவர்களுக்கும், இப் பேச்சுக்கள் நிகழும் காலத்திலேயே குறிப்பெடுத்துக் கட்டுரைகளாக்கித் தந்த புலவர், திரு. சாம்பசிவம் அவர்களுக்கும், வள்ளுவர் கழகமே புலவர் பேரவை என்னுமாறு ஒன்று கூடி எனக்கு ஊக்கமளித்த மதுரைத் தமிழ்ப் புலவர்களுக்கும், இந்நூல் வர உதவிய பிற அனைவருக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*தமிழ்க்கலை இல்லம்*
*சென்னை-30*
1-6-59

அ. மு. பரமசிவானந்தம்

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தொடக்க உரை | ... | 9 |
| 2. | வழிகாட்டி | ... | 26 |
| 3. | நாடும் நகரும் | ... | 45 |
| 4. | அரசும் குடியும் | ... | 69 |
| 5. | அகமும் புறமும் | ... | 98 |
| 6. | காலமும் பொழுதும் | ... | 118 |
| 7. | அன்பும் பண்பும் | ... | 138 |